பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

# உதயன்

Registered as a Newspaper

சுடர் : 40
கதிர் : 18

சனிக்கிழமை
14 டிசெம்பர் 2024

கார்த்திகை 29 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

## ஹரிணி சந்தோஷ் ஜா நேற்றுப் பேச்சு

கொழும்பு, டிசெ. 14
இலங்கையின் பிரதமர் ஹரிணிக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் 15

## ஜனவரி முதல் மாநகரசபைக்கு புதிய கட்டடம்

யாழ்., டிசெ. 14
யாழ்ப்பாணம் மாநகர சபைக்காக அமைக்கப்பட்டுவந்த புதிய கட்டடம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பாவனைக்கு வழங்கப்படும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் தெரி 15

# கூச்சல் குழப்பத்தில் முடிவடைந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்!

### அவமானப்படுத்தப்பட்ட அரச அதிகாரிகள் வேடிக்கை பார்த்தனர் அரச எம்.பி.க்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருடைய வார்த்தைப் பிரயோகங்களால் அரச அதிகாரிகள் அவமானப்படுத்தப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
அரச அதிகாரிகளையும், கற்றறிந்தவர்களையும் நோக்கி, 'அன்ரி', 'தங்கம்', 'முத்து' இவ்வாறான 15

## வேலையற்ற பட்டதாரிகள் போராட்டம்

யாழ்., டிசெ. 14
வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக 15

## எலிக்காய்ச்சல்: 58 பேர் பாதிப்பு!

யாழ்., டிசெ. 14
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது பரவிவரும் எலிக்காய்ச்சல் மற்றும் மர்மக்காய்ச்சல்களால் 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் 15

### கலாநிதிப் பட்டத்தால் வந்த வினை

# சபாநாயகர் பதவி விலகல்!



கொழும்பு, டிசெம்பர் 14
ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் சபாநாயகர் அசோக ரன்வல, கலாநிதிப் பட்டம் தொடர்பில் ஏற்பட்ட தொடர் எதிர்ப்புகள் மற்றும் அழுத்தங்களைத் தொடர்ந்து நேற்றுப் பதவி விலகியுள்ளார். 15

## எலிக்காய்ச்சலை எதிர்கொள்ள தயார்நிலையில் யாழ். போதனா!

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் எலிக்காய்ச்சல் நோயை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ளன என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். 15

## தவறு செய்பவர் யாராயினும் தண்டிப்பதற்கு பின்னிற்கோம்

### ஜனாதிபதி அநுர திட்டவட்டம்



கொழும்பு, டிசெ. 14
தவறு செய்பவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் அரசாங்கத்தில் இருந்தாலும், தண்டிப்பதற்கு இருமுறை சிந்திக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி அநுரகுமார தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி அநுரகுமார, அரச ஊடகப் பிரதானிகளை நேற்றுக் காலை சந்தித் 15



படம்: ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றது. மாலை 4.30 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நல்லூர் முருகப்பெருமான் வெளிவீதியுலா வந்தார். (அ–ம)

### நிதி விடுவிப்பு இன்மையால்

## கூரைகள் இன்றி ஆயிரம் வீடுகள்!

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முழுமையான நிதி விடுவிப்பு இன்மையால், ஆயிரம் வீடுகள் கூரைகள் இல்லாமல் காணப்படுகின்றன என்று 15

முச்சந்தி முனி



'குரங்கு கையில பூமாலையைக் குடுத்தா இனிமேல் இப்பிடித்தான் நடக்கும் கண்டியளோ'

## புலம்பெயர் தமிழர்களுக்காக இயங்குகின்றது அநுர அரசு

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 14
புலம்பெயர் தமிழர்களுக்குத் தேவையான அனைத்துக் கோரிக்கைகளையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. ஆதலால்தான் மஹிந்தவின் பாதுகாப்புத் தற்போது குறைக்கப்பட்டுள்ளது என்று பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.
பொதுஜன பெரமுனவின் உறுப்பினரான சட்டத்தரணி மனோஜ் கமகே 15

## இராணுவப் பிடியிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இராணுவத்தின் பிடியில் காணப்படும் 2 ஆயிரத்து 624.29 ஏக்கர் நிலப்பரப்பு எதிர்வரும் காலங்களில் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மலை - நாயாறு பகுதியில் மணல் அகழ்வுக்கு நடவடிக்கை

## மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

**முல்லைத்தீவு, டிசெ. 14**

**முல்லைத்தீவு - செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் நிறுவனமொன்றால் இல்மனைட் அகழ்விற்கு எடுத்த முயற்சி, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், அந்தப் பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.**

மக்களுடைய அனுமதியின்றி, அத்துமீறி எமது இடங்களில் கனியமணல் அகழ்வு மேற்கொள்ள முடியாதெனவும். உடனடியாக இந்த அகழ்வு முயற்சிகளைக் கைவிட்டு அங்கிருந்து வெளியேறுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும் பொதுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

ஏற்கனவே கொக்கிளாய் பகுதியில் மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தபோது, மக்களுக்குரிய சுமார் 44 ஏக்கர் வயல் காணிகளை அத்துமீறி அபகரித்து அங்கு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அந்தப் பகுதிகள் தற்போது மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, தமது பகுதிக்குள் அவ்வாறான நடவடிக்கைக்கு இடமில்லை என்று மக்கள் உறுதிப்படத் தெரிவித்ததைத் தொடர்ந்து அதிகாரிகள் அங்கிருந்து சென்றனர். (ம-26-18)

## அடுத்த ஆண்டில்

# மின்சாரசபை மறுசீரமைப்பு

கொழும்பு, டிசெ.14

மின்சாரசபை மறுசீரமைப்புப் பணிகளை 2025 மார்ச் மாதத்துக்குள் நிறைவுசெய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அதற்கமைய மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பான யோசனை எதிர்வரும் வாரம் அமைச்சரவைக்கு முன்வைக்கப்படும் என எரிசக்தி அமைச்சின் மின்சாரத்துறை மறுசீரமைப்புப் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் புபுது நிரோஷன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

மின்கட்டணத் திருத்தம் மற்றும் மின்சாரத்துறை மறுசீரமைப்பு குறித்து நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய கடப்பாடு மின்சாரசபைக்கு காணப்படுகிறது. எதிர்வரும் 06 மாத காலத்துக்கு மின்கட்டணத்தை திருத்தம் செய்யாமல் தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுமாறு முன்வைத்த பரிந்துரைகள் பற்றி அதிகளவில் பேசப்படுகிறது. இருப்பினும் தொழில்நுட்பக் காரணிகள் தொடர்பில் எவரும் கவனம் செலுத்துவதில்லை. இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பதை தனியார் மயப்படுத்தல் என்று குறிப்பிடமுடியாது. மின்சாரசபையின் எந்த வளங்களையும் தனியார் மயப்படுத்தப் போவதில்லை - என்றார். (ச)

# அதானி திட்டத்துக்கு அரசாங்கம் வரவேற்பு

கொழும்பு, டிசெ.14

கொழும்புத்துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் அபிவிருத்திப் பணிகளை இந்தியாவின் அதானி குழுமம் ஆரம்பிக்கவேண்டும் என துறைமுகவிவகாரங்களிற்கான அமைச்சர் பிமல்ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்புத்துறைமுக மேற்குமுனையம் திட்டத்துக்கான நிதித்தேவைகள் எழுந்துள்ளன. அந்தத் திட்டத்துக்கு நிதி வழங்குவதற்கு முன்வந்த அமெரிக்க நிறுவனத்துக்கும் அதானி குழுமத்துக்கும் இடையில் பிரச்சினை எழுந்துள்ளமை தெரிந்ததே.

அதானி குழுமம் ஏற்கனவே இந்த விடயத்துக்குத் தீர்வைக் கண்டுள்ளது. அவர் தனது சொந்த நிதியிலிருந்து அதானி குழுமம் இந்த திட்டத்துக்கு நிதியை வழங்கவுள்ளது. அந்தவகையில் கொழும்புத்துறைமுகத்தில் மிகவிரைவில் அதானி குழுமம் தனது நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தையிட்டி விகாரை சட்டவிரோதமானதே

## ஒருங்கிணைப்புக்குழுவில் கஜேந்திரகுமார் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 14

தையிட்டி விகாரை சட்டவிரோதமானதே இதில் மதவாதமோ இனவாதமோ இல்லை. இது சட்டவிரோதமாக தனியார் காணியை அபகரிக்க அமைக்கப்பட்ட ஒன்றே. இதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் அதன் தலைவர் அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் நேற்று நடைபெற்றபோதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

குறித்த விகாரை மக்களுடைய தனியார் காணியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது. கடந்த கால மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவில்லை.

எனவே இந்த சட்டவிரோத விகாரை தொடர்பில் கரிசனை செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இதற்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரசேகர், மீள்குடியேற்றம் தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது. இராணுவத்தினர் வசம் உள்ள காணிகளை விடுவிக்க பேச்சுகள் இடம்பெற்றுவருகின்றன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ச-26.125)



## 'கலாநிதி' பட்ட விவகாரம்

# நம்பிக்கையில்லாப் பிரேரணை கைச்சாத்திட்டது ஐ.ம.சக்தி

கொழும்பு, டிசெ.14

சபாநாயகர் அசோக ரன்வலவின் 'கலாநிதி' பட்டம் தொடர்பான விவகாரத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையொப்பம் திரட்டும் நடவடிக்கையை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று ஆரம்பித்துள்ளது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, அதன் செயலாளர் நாயகம் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி. அலவத்துவல, அஜித் பி பெரேரா, சுஜித் சஞ்சய் பெரேரா, சதுர கலப்பத்தி, ஜகத் விதான மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். (ச-44)




# மற்றொரு ஆளுங்கட்சி எம்.பி.யின் கலாநிதியும் 'கட்'

கொழும்பு, டிசெ.14

நாடாளுமன்ற இணையத்தளத்தில் ஆளும் கட்சியின் மற்றுமொரு நாடாளுமன்ற உறுப்பினரின் கலாநிதிப் பட்டம் நீக்கப்பட்டுள்ளது.

நீதி அமைச்சரும் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷன நாணயக்காரவின் பெயரின் முன்னால் எழுதப்பட்டிருந்த 'கலாநிதி' என்ற பட்டம் தற்பொழுது நீக்கப்பட்டுள்ளது.


அமைச்சர் நாடாளுமன்றத்துக்கு வழங்கிய தகவல் பத்திரத்தில் கலாநிதி என்ற பட்டம் இடம்பெற்றிருக்கவில்லை என்றும் அதன்படியே, மேற்படி தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

# அரசுக்கு மமதை இல்லை

கொழும்பு, டிசெ.14

மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் உள்ளது என்ற மமதையில் எமது அரசாங்கம் தன்னிச்சையாகச் செயற்படவில்லை என்று இராஜாங்க அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாம் மக்களிடம் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கோரவில்லை. மக்கள் அதனை எமக்கு வழங்கினார்கள். எமக்கு பெரும் பலம் உள்ளது என்ற மமதையில் செயற்படவும் இல்லை. விமர்சனங்களை உள்வாங்கி, தவறுகள் இருப்பின் அவற்றை சரிசெய்து பயணிப்பதற்கு அரசாங்கம் தயாராகவே உள்ளது.



சபாநாயகர் தனது தரப்பு நியாயத்தை விரைவில் தெளிவுபடுத்துவார். அதனால்தான் இதுவிடயம் தொடர்பில் நாம் தற்போது மௌனமாகவுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார அலகு ஒன்று 24 ரூபாவாக குறையும்

## மின்சாரசபையின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

**மின்சார அலகு ஒன்றுக்கு தற்போது அறவிடப்படும் 31 ரூபாவை 24 ரூபாவாக குறைக்க நடவடிக்கை எடுக்கப் படும் என இலங்கை மின்சாரசபையின் தலைவர் கலாநிதி திலக் சியம்பலாபிட்டிய அறிவித்துள்ளார்.**

கடந்த இரு வாரங்களாக பெய்த மழையால், நீர் மின் உற்பத்தி மூலமான மின்சாரம் பயன்படுத் தப்பட்டது. எதிர்வரும் காலங்களில், மின் உற்பத் தியில் செலவைக் குறைத்து, இலாபமீட்டும் துறையாக முன்னெடுக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுவருவதுடன், பொதுமக்களுக்கு குறைந்த விலைக்கு மின்சாரத்தை வழங்க திட்ட மிட்டுள்ளோம். தற்போது ஒரு மின் அலகுக்கு 31 ரூபா அறவிடப்படுகிறது. ஆனால், அதற்கு செலவு அதிகம்.

இதனை 24 ரூபாவாக குறைக்க முயற்சிக்கின் றோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நீதியரசர் நியமனம் ரணிலின் பரிந்துரை நீதிமன்று நிராகரிப்பு

கொழும்பு, டிசெ. 14

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் முன்வைக்கப்பட்ட பரிந்து ரைக்கு அரசியலமைப்புப் பேரவை, அங்கீகாரத்தை வழங்கவேண்டும் என்று கோரி சட்டத்தரணி ஒருவரி னால் தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமை மீறல் மனு நேற்றுமுன் தினம் சட்டச்செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தற் போதைய தலைவர் நிஸ்ஸங்க பந் துல கருணாரத்னவை உயர் நீதி மன்ற நீதியரசராக நியமிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவினால் பரிந்துரை முன்வைக் கப்பட்டது. குறித்த பரிந்துரைக்கு அரசியலமைப்புப் பேரவை, அங்கீகா ரத்தை வழங்கவேண்டும் என்று கோரி சட்டத்தரணி ஒருவரினால் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப் பட்டது.

இந்தநிலையில் உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் கொண்ட அமர்வு இந்த மனுவைத் தள்ளுபடி செய்தது டன், அரசமைப்புப் பேரவையின் மூன்று உறுப்பினர்களுக்கு 1.5 மில் லியன் ரூபாவைச் செலுத்துமாறு மனுதாரருக்கு உயர்நீதிமன்றம் உத் தரவிட்டுள்ளது. (ச-இ)

## தேங்காயை சோதிக்காதீரென உரிமை மீறுகின்றது சதொச

கொழும்பு, டிசெ. 14

தேங்காய் வாங்குபவர்கள் தேங்காயின் தரத்தை பரீட் சித்துப் பார்க்கக்கூடாது என சதொச உத்தரவிடுகின் றமை அடிப்படை உரிமை மீறல் என மக்கள் போராட்ட முன்னணி உறுப்பினர் புபுது ஜெயகொட தெரிவித்துள் ளார். சதொசவில் ஒருவருக்கு மூன்று தேங்காய்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் தேங்காய் வாங்குபவர் கள் தேங்காயின் தரத்தை பரீட்சித்துப் பார்க்கக்கூடாது எனக் கூறுவது ஓர் அடிப்படை உரிமை மீறல் என அவர் தெரிவித்துள்ளார். (ச-22,6)

## கனடாவிலிருந்து வந்த கஞ்சாப்பொதி

வவுனியா,டிசெ.14

கனடாவில் இருந்து கொள்கலன் ஒன்றில் இலங் கைக்கு அனுப்பப்பட்ட பொதியில் கஞ்சா அடங்கிய 20 ரின்களை இலங்கை சுங்க அதிகாரசபை கைப்பற்றி யுள்ளது.

சுங்க அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் அவை கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தக் கஞ்சாப் பொதி வவுனியா மற்றும் களுத்துறை முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த போதைப்பொருள் மேல திக விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பாக வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-110-18)

## வாகன இறக்குமதிக்கு இணையத்தள சேவை

கொழும்பு, டிசெ. 14

இலங்கைக்கு இறக்குமதி செய்யப் படும் வாகனங்களின் சட்டபூர்வ தன்மையை உறுதிப்படுத்துவதற் காக இலங்கை சுங்கத்தினரால் (SriLanka)இணையத்தளசேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. இதன்படி, வாகனங்களின் செஸி இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் வாகனத்தின் சட்டபூர்வ தன் மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (ச-இ)



## பரு. மருத்துவமனைக்கு பவானந்தராஜா விஜயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 14

காய்ச்சல் காரணமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளை நாடாளுமன்ற உறுப் பினர் மருத்துவர் எஸ். ஸ்ரீ பவானந்தராஜா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார். இதன்போது சுகாதார அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோருடன் கலந் துரையாடினார். (ச-22,100)




மாரிகாலத்தில றோட்டில வெள்ளம் நிண்டு பாத்திருப்பீங்கள், வளவுக்க வெள்ளம் நிண்டு பாத்திருப்பீங்கள், அவ்வளவு ஏன் வீட்டுக்க கூட வெள்ளம் நிண்டதைப் பாத்திருப்பீங்கள். ஆனால் மேல்மாடியில வெள்ளம் நிண்டு பாத்தி ருக்கிறீங்களா? அப்பிடியொரு அதிசயத்தை நீங்கள் பாக்க ஆசைப்பட்டால், அங்க இஞ்சை யெண்டு அலையாமல் எங்கட யாழ்ப்பாண மாநகரசபையின்ர பராமரிப்பில ரவுணுக்குள்ள இருக்கிற 'நியூமார்க்கெட்' (புதிய சந்தை) கட்ட டத்துக்கு போனால் கண்குளிரப் பாக்கலாம்.

இப்பிடி அங்க வெள்ளம் வரவேணுமெண் டதுக்காக முனிசிபல்காரர் எல்லாரும் தலை யைப் பிய்ச்சு, மூளையைக் கசக்கி, உலகத்தில உள்ள இஞ்சினியர்மாரிட்ட எல்லாம் அட்வைஸ் கேட்டு, கடைசியா கூரைசீலியில ஓட்டையளை போட்டிருக்கினம். அதனால 'அந்திமழை பொழிகிறது, ஒவ்வொரு துளியும் மாடியில விழுகிறது' எண்டு பாட்டுப்படிச்சபடி, சோவெண்டு பெய்யிறமழை மாடியில வெள்ளமா வாற அழகை ஆவெண்டு பாக்கிற பொன்னான வாய்ப்பை முனிசிபல்காரர் யாழ்ப்பாணச் சனத்துக்கெண்டு ஸ்பெசலாச் செய்து குடுத்தி ருக்கினம். இப்பிடி ஆக்களின்ர பாதத்தை மேவி மாடியில வெள்ளத்தை நிக்க வைச்சதில முனிசிபல்காரரின்ர ஜீவ காருண்யமும் ஒளிஞ்சிருக்குது.

இந்தமழைக்குள்ள ரவுணுக்குள்ள இருக் கிற எலியள் எல்லாம் வெளியில போய் குளிக் கவோ, ஒண்டுக்கு ரண்டுக்கு போகவோ ஏலா தெல்லோ. அதைவிட எலிக்காய்ச்சல் எண்ட பயத்தில சனம் எலியைக் கண்டாலே அடிச்சுக் கொல்லுதுகள். இப்பிடி எலியள் வெளியில அலைஞ்சு திரிஞ்சு இயற்கைக் கடன்களைக் கழிக்காமல், நியூமார்க்கெட் மாடியையே எலி யளின்ர கட்டணமில்லாக் கழிப்பறையாவும், நீச்சல் குளமாவும் மாத்திக் குடுத்திருக்கினம். உலகத்திலேயே எலியளுக்கெண்டு இப்பிடி மாடியில நீச்சல் குளம் கட்டிக்குடுத்த பெருமை யாழ்ப்பாணக்காரருக்கு வந்துசேர்ந்திருக்கு. மாடி வெள்ளத்தில எலிப்புழுக்கையில் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கிறதால, ஆருக்கும் எலிக்காய்ச்சல் தேவையெண்டால் நியூமார்க் கெட்டுக்குப் போனால் மொத்தமாவும், சில்ல றையாவும் வாங்க ஏலும்.

இதைவிட இன்னொரு ஹைலைட்டும் இருக்கு. இப்பிடி மாடி வெள்ளத்துக்கும், எலி யளின்ர கட்டணமில்லாக் கழிப்பறைக்கும், நீச்சல் குளத்துக்கும் இந்த மாடியில உள்ள கடைக்காரர்கள்தான், முனிசிபல்காரருக்கு வரி கட்டி நிதியனுசரணை செய்யினமாம். இப்பிடி எலிப்புழுக்கை மணத்தை தங்கட வரிக்காசைக் கட்டி வாங்கிற கடைக்காரர்கள் உண்மை யிலேயே குடுத்துவைச்ச பிறவியள் தான்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேன் என சீனிப்பாணி வவு.வில் மூவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 14
தேன் என சீனிப்பாணியைத் தயாரித்து விற்பனை செய்த மூன்று பேர் வவுனியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா பொதுச் சுகாதாரப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நெளுக்குளம் ஊர்மிலாக்கோட்டம் பகுதியில் வவுனியா சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றது.
இதன்போது விற்பனைக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த 200 போத்தல் சீனிப்பாணி சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூன்று பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-110)

# ரஷ்யாவின் உரம் கிளிநொச்சி வருகை



கிளிநொச்சி, டிசெ. 14
ரஷ்யா அரசாங்கத்தினால் இலங்கை விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்காக கையளிக்கப்பட்ட 55 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் (எம், ஓ.பி.) கிளிநொச்சி விவசாயிகளுக்கு வழங்குவதற்காக எடுத்து வரப்பட்டுள்ளது.
பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை கமநலசேவை நிலையங்களுக்கே நேற்று கொண்டுவரப்பட்டன. அவை விரைவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார். (ச-113-27)



மாகாண

# காணித் திணைக்கள கட்டடம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி,டிசெ.14
75 மில்லியன் ரூபா செலவில் மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களத்துக்கு கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட நிரந்தரக் கட்டடம் கடந்த வியாழக்கிழமை சம்பிரதாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது. குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடமாகாண பிரதம செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஜனவரி 3 ஆம் திகதி முதல் மக்கள் கிளிநொச்சி அலுவலகத்திலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுவரை காலமும் யாழ்ப்பாணத்தில் தற்காலிக இடத்தில் குறித்த திணைக்களம் இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-33-113)



# கடமையேற்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகத் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். (ச-125-9-66)




# நெஸ்லே நிறுவனத்தால் நிவாரண உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.14
நெஸ்லே லங்கா நிறுவனம் இலங்கையில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பிராந்தியங்களுக்கு குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களை இலக்காகக் கொண்டு வடமாகாணத்துக்கு ஒருகோடி ரூபா பெறுமதியான நெஸ்லே உற்பத்திகளான நெஸ்டமோல்ட், மகிநூடில்ஸ் மற்றும் நெஸ்ட்டீ என்பவற்றை நன்கொடையாக வழங்கியுள்ளது. இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஊடாக இந்தப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. (ரி-10)

# ஞாயிறன்று வாகனப் பவனி

யாழ்ப்பாணம்,டிசெ.14
வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால் நடத்தப்படும் பாரம்பரிய கலைநிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளில் பி.ப. 3 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை முற்றவெளிப்பகுதியில் இடம்பெறவுள்ளன.
பழைய வாகனங்களின் பவனி 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரிய அனுகூலமான நாள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகையால் சுபநிகழ்ச்சி ஒன்றுக்கான பேச்சுவார்த்தை சுமுகமாக முடியும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலையே காணப்படும்.

**மிதுனம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேற்றுமைகள் நீங்கி சுமுக உறவு ஏற்படும். பயணங்களால் ஆதாயம் உண்டாகும்.

**கடகம்:** தந்தை வழி உறவுகளால் சங்கடம் ஏற்படக்கூடும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். எதிரிகள் வகையில் எச்சரிக்கையாக இருக்கவும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். சிலருக்கு மனதில் இனம் தெரியாத சோர்வு உண்டாகலாம். வெளியூர்ப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்:** பரபரப்புடன் செயற்படும் நாளாக இருக்கும்.வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். முக்கியமான முடிவுகள் எதையும் இன்று எடுக்க வேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக அமையும். மறைமுக இடையூறுகள் விலகும். மனதில் தன்னம்பிக்கை பளிச்சிடும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்க வகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாக முடியும். சிலருக்கு சிறிய அளவில் ஆரோக்கியக்குறைவு ஏற்பட்டு சரியாகும். உறவினர்களுடன் பேசும்போது வீண் மனவருத்தம் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாகமுடியும். கணவன் மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரியங்களில் வெற்றி உண்டாகும்.

**மீனம்:** பொறுமையுடன் இருக்கவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்க நேரிடும். முக்கியமான முடிவுகளை ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

சுமைகளைக் கண்டு நீ துவண்டு விடாதே இந்த உலகத்தை சுமக்கும் பூமியே உன் காலடியில் தான்.

– விவேகானந்தர் –

## இடைவிலகல்களால் இருள்கிறது வடக்கு


யாழ்ப்பாணத்தில் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் இடைவிலகிய மாணவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதாகவும், 58 மாணவர்கள் இவ்வாறு கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைவிலகினார்கள் என்றும் அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இடைவிலகிய மாணவர்களில் 56 மாணவர்கள் மீண்டும் கல்விக் கட்டமைப்புக்குள் நுழைக்கப்பட்டுள்ள போதிலும், இந்த விலகல்களின் பின்னணி தீவிரமாக ஆராயப்படவேண்டியது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. போதைப்பொருள் பாவனை, இளவயதுக் காதல், வறுமை, நெறிபிறழும் கலாசாரம் மற்றும் அக்கறையற்ற பெற்றோர் என இதற்கான காரணங்களை அடுக்கிக்கொண்டே செல்லமுடியும்.

வடக்கு மாகாணத்தில் மாணவர்களை மையப்படுத்திய போதைக் கலாசாரங்கள் கடந்த சில வருடங்களாகவே மிகையாக அதிகரித்திருக்கின்றன. மஹிந்த, மைத்திரி, கோத்தாபய, ரணில் தற்போது அநுர என்று ஐந்து அரசாங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நாட்டில் மாணவர்கள் மத்தியில் இருந்து போதைப் பொருளை முற்றாகத்துடைத்தெறிய எந்தவொரு அரசாங்கத்தாலும் இயலவில்லை. அநுர அரசாங்கத்துக்கு அவகாசம் வழங்கப்படவேண்டும் என்றாலும், ஏனைய நான்கு தலைமைகளும் இந்த விடயத்தில் படுதோல்வி அடைந்திருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்தில்லை. கல்வியில் மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தப்போவதாகக் கூறிக் கொள்ளும் அநுர அரசாங்கம், அனைத்துவிதமான நகர்வுகளுக்கும் முன்னர்-போதையைத் தோற்கடிக்கும் பட்சத்திலேயே, அதன் பலாபலன்களை உணர்ந்து கொள்ள முடியும்.

ஏனெனில், மாணவர்கள் மத்தியில் போதைப் பொருள் விரவியிருப்பதற்கும், அவர்கள் தம் கற்றல் செயற்பாடுகளைக் கைவிட்டு பாடசாலைகளில் இருந்து இடைவிலகுகின்றமைக்கும் இடையிலான தொடர்பென்பது நேரடியானது. போதைப்பொருள் கலாசாரத்தால் ஒரு மாணவன் கற்றலை இடை நிறுத்துகின்றான் என்றால், இடைவிலகலின் பின்னர் அந்த மாணவன் அந்த அரக்கத்தனத்துக்குள் ஆட்படும் வீச்சு பலமடங்கு அதிகரிக்கும். இதுவே யதார்த்தம். யாழ்ப்பாணத்திலும் சரி, வடக்கின் இதர பகுதிகளிலும் சரி கஞ்சா, ஹெரோய்ன், மாவா இவ்வாறான போதைப் பொருள்களுடன் கைதாகும் நூற்றுக்கணக்கானோரில் பலர், பாடசாலைப் பருவத்தைக் கடந்தும் கடக்காமலும் இருப்போர்தான். கற்றலில் இருந்து இடைவிலகியோர்தான்.

எல்லாவற்றுக்கும் மேலாக, கற்றலில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் தொடர்பில் சிறப்புப் பொறிமுறையொன்று மாகாணம் தழுவிய ரீதியில் வடக்கில் ஏற்படுத்தப்படவேண்டும். போதைப்பொருள் மட்டுமல்ல வறுமையும் இந்த இடைவிலகல்களுக்குப் பிரதானமான காரணமாகவே அமைகின்றது. வறுமையால் ஒரு மாணவன் இடைவிலக நேரிடுகின்றது என்றால் அது அரசாங்கத்தின் தோல்வி மட்டுமல்ல சமூகத்தின் தோல்வியும்கூட. சிறப்பு உதவித் திட்டங்கள் மூலமாக அத்தகைய மாணவர்களுக்கு உதவும் வகையிலான நடவடிக்கைகள் உருவாக்கப்படுவது அவசியம். அதிலும், போரால் நேரடிப் பாதிப்பை எதிர்கொண்ட மாகாணங்கள் என்ற ரீதியில் வடக்கு மற்றும் கிழக்கில் இத்தகைய நடவடிக்கைகள் தவிர்க்கப்பட முடியாதவை.

இடைவிலகல் எனப்படுவது ஒரு மாணவனுடைய அல்லது அவன் குடும்பத்துடைய பிரச்சினை மட்டுமல்ல. அது சமூகப் பிரச்சினை. ஆதலால், வெறுமனே அறிக்கை கோருவதுடன் இருந்துவிடாது, இடைவிலகல்களைத் தவிர்க்க - குறைக்க ஏதுவான அத்தனை சாத்தியத் திட்டங்களையும் ஏற்படுத்துவதே எம் முன்புள்ள பொறுப்பும் கடமையுமாகும். இல்லையேல், இடைவிலகல்களால் வடக்கு இருளும்.



# அதிவெப்பம் காரணமாகவே தேங்காய் உற்பத்தி வீழ்ச்சி

### பேராசிரியர் அருணகுமார தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.14

**வருடத்தின் முதல் சில மாதங்களான மார்ச் முதல் ஜூன் வரை நிலவிய கடுமையான வெப்பநிலையாலேயே தேங்காய் உற்பத்தியில் பெருவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என ருஹுனு பல்கலைக் கழகத்தின் பயிர் விஞ்ஞானப் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அருணகுமார தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் வருடாந்தம் பயிரிடப்படும் தென்னை மரக் கன்றுகளின் எண்ணிக்கை அதிக வெப்பத்தாலேயே சுமார் 70 இலட்சம் வரை குறைந்துள்ளது.

தென்னை மரத்துக்கு உகந்த வெப்பநிலை 27-28 செண்டிகிரேட் வெப்பநிலையாகும். ஆனால், 33 செண்டிகிரேடுக்கு மேல் செல்லும்போது, தென்னை மரங்களின் மகரந்தச் சேர்க்கை குறைந்து, காய்க்கும் தன்மை குறைகிறது.

உலகிலேயே அதிக தேங்காய் பாவனையை கொண்ட நாடாக இலங்கை திகழ்கிறது.

எனவே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தேங்காய் தட்டுப்பாட்டைக் குறைக்க குறுகிய கால நடவடிக்கையாக, விலங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவேண்டும்.

அத்துடன் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, தென்னை மரங்கள் நடுவதை அதிகரிக்க வேண்டும் - என்றார். (ச-இ)

## 2,900 தொன் அரிசி 3 நாள்களில் இறக்குமதி

கொழும்பு, டிசெ.14

கடந்த டிசெம்பர் 10ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் 12 ஆம் திகதி மாலை வரை 2,900 மெற்றிக் தொன் அரிசி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக, சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர், மேலதிக பணிப்பாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார். இந்த அரிசித் தொகை சுங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விரைவாக விடுவிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## கோழி இறைச்சி விலையேற்றம்

கொழும்பு, டிசெ. 14

பண்டிகைக் காலத்தையொட்டி கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலை 1,500 ரூபாவை அண்மித்துள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார். (ச-இ)

## கலால் வருமானம் ரூ. 23,200 கோடி

இந்த வருடத்தில் கலால் வரித் திணைக்களத்தின் வருமானம், 23,200 கோடி (232 பில்லியன்) ரூபாவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதன்படி, இந்த வருடம் நவம்பர் மாதம் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியிலேயே இந்த வருமானம் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இந்த வருடத்திலேயே 200 பில்லியனை விட அதிகமான வருமானத்தை கலால் திணைக்களம் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## எரிபொருளுக்குத் தட்டுப்பாடில்லை

கொழும்பு, டிசெ.14

எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்தவொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் எரிபொருள் தட்டுப்பாடு இடம்பெறாது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நாட்டில் போதிய எரிபொருள் காணப்படுவதாகவும், தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்திற்காக அரசாங்கத்தின் நிறுவனமாக அந்தப் பொறுப்பை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்வதாகவும் தலைவர் ஜனக ராஜகருணா சுட்டிக்காட்டினார். (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்தியின் திறவுகோல் உள்ளூராட்சி மன்றங்களிடமே!

வடக்கு ஆளுநர் அழைப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 14

**வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிப்பதற்கு உள்ளூராட்சிமன்றங்கள் முதலீடுகளை ஊக்குவிக்கவேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அழைப்பு விடுத்துள்ளார்.**

பருத்தித்துறைப் பிரதேசசபையின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மாத நிகழ்வும், பண்பாட்டுப் பெருவிழாவும் பருத்தித்துறை எஸ்.எஸ்.மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

இதில் விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாகாணத்தில் இளையோர் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை நாம் எமது மாகாணத்தில் உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

அதற்கு முதலீடுகளை இங்கு ஊக்குவிக்கவேண்டும். எமது மாகாணத்தை நாம் அபிவிருத்தியடைந்த மாகாணமாக மாற்றும் இலக்கை நோக்கிப் பயணிக்க அனைவரும் ஒத்துழைத்துச் செயற்படவேண்டும் - என்றார். (ச-125,66,20,159)



# சிறந்த விவசாயிகள் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.14

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில், வடமாகாணத்திலுள்ள சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, வடமாகாண விவசாய அமைச்சின் 'அறுவடை' இதழும் வெளியிட்டு வைக்கப்பட்டது. ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சுக்கு கீழுள்ள திணைக்களங்களின் பணிப்பாளர்கள், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன், ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாய மற்றும் கால்நடை நீர்ப்பாசன திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-25,113,27,214)




# மாற்றுத்திறனாளிகளால் வவுனியாவில் ஊர்வலம்!!

வவுனியா, டிசெ. 14

வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் ஒஹான் நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வவுனியாவில் மாற்றுத்திறனாளிகளின் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று அண்மையில் முன்னெடுக் கப்பட்டது. 'உள்வாங்கல் மற்றும் நிலையான எதிர்காலத்திற்காக இயலாமையுடையவர்களின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல்' எனும் தொனிப்பொருளில் வவுனியா புதிய பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான ஊர்வலம் மருத்துவமனை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தை அடைந்தது. ஏனைய நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றன. (ச-110)

# சிந்தப்படும் கழிவுகள்; மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ். நகரில் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் வாகனங்களிலிருந்து வீதியில் சிந்தப்படுவதால் வீதியால் பயணிக்கும் பயணிகள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்க நேரிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கழிவுப்பொருள்கள் உழவு இயந்திரங்களில் எடுத்துச் செல்லப்படுவதனால் சில இடங்களில் பொதி செய்யப்பட்ட கழிவு மூடைகள் வீதிகளில் விழுகின்றன.

இதனை விலங்குகள், பறவைகள் இழுத்துச் செல்வதனால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது.

எனவே வாகனங்களில் கழிவுப்பொருள்களை எடுத்துச் செல்லப்படும் போது பாதுகாப்பான முறையில் கொண்டு செல்ல வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி-17)

# இந்திய மீனவர் அத்துமீறல் முற்றாகத் தடைசெய்யுங்கள்

ரவிகரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 14

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறலை முற்றாகத் தடை செய்து எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை காப்பற்றவேண்டும் என்று இந்தியத் தூதுவரிடம் வலியுறுத்தியதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த விடயம் அவரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. இதற்கு அவர் பதிலளிக்கும்போது, இந்த இழுவைப் படகுகள் அத்துமீறி நுழையும் விடயத்தில் கவனம் செலுத்துவதாக கூறினாரெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார். (ச-25, 246)

# கலைவிழாவும், பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி நகர் புவேந்தன் முன்பள்ளி நிலையத்தின் 28ஆவது வருடாந்த கலை விழாவும், பரிசில் வழங்கும் நிகழ்வும் நிலையைத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ஐங்கரன் மணி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக காரைநகர் பிரதேச செயலாளர் ரஞ்சனா நவரத்தினம் பங்கேற்றார்.

நிகழ்வில் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ரி-159)



# பண்டிகைக் காலத்தில் பொலிஸார் ரோந்து

யாழ்ப்பாணம், டிசெ.14

நத்தார் மற்றும் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு யாழ்.நகரிலும் நகரை அண்டிய புறநகர்ப் பகுதிகளிலும் இரவு வேளைகளில் பொலிஸாரின் கண்காணிப்பு மற்றும் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முற்றவெளி, பண்ணை, கோட்டைப் பகுதிகளில் இரவு வேளைகளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடுவோர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ரி-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆண்டுமுதல்

# விவசாயிகளிடமிருந்து நேரடி நெல் கொள்வனவு

**யாழ்ப்பாணம், டிசெ. 14**

**அடுத்த ஆண்டு முதல் அரச கட்டமைப்பின் ஊடாக விவசாயிகளிடமிருந்து நெல் அதிகளவில் கொள்வனவு செய்யப்பட்டு அரச அரிசி உற்பத்தி ஆலைகளில் களஞ்சியப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பெருந்தோட்டத்துறை அபிவிருத்தி மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேசிய உற்பத்தியை மேம்படுத்த விவசாயத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்படும்.

அத்துடன் சிறு மற்றும் நடுத்தர அரிசி உற்பத்தியாளர்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். அத்தியாவசிய உணவு பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 55 ஆயிரம் மெற்றிக் தொன் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

அவற்றில் 27.50 மெற்றிக் தொன் உரத்தை தெங்குப் பயிர்ச்செய்கைக்கு வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். அத்துடன் 5 ஏக்கர் நிலப்பரப்பினை கொண்ட பதிவு செய்யப்பட்ட சிறு தெங்கு தோட்ட உற்பத்தியாளர்களுக்கு மானிய அடிப்படையில் உரம் விநியோகிக்கப்படும்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேசிய உற்பத்தியை மேம்படுத்த விவசாயத்துறைக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்படும்.

காட்டு விலங்குகளினால் பயிர்ச்செய்கைக்கு ஏற்படும் பாதிப்பை தடுப்பதற்கு தொழில்நுட்ப ரீதியில் தீர்வு முன்வைக்கப்படும் - என்றார். (ச-இ)



# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.14

வடமாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'பட்டதாரிகளுக்கும் பாராபட்சமின்றி தொழிலை வழங்கு' , 'பட்டதாரிகளின் கனவுகளுக்கு அரசு உயிர் கொடுக்குமா?' 'பல வருட கனவு நிறைவேறுமா ?' 'பட்டம் வீட்டில் பட்டதாரிகள் தெருவில்' என்னும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்திய வண்ணம் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னேடுத்தனர்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் இடம் பெற்ற நிலையில் கவனயீர்ப்பு போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்திருந்தனர். (ச-27)



# யாழ்.மாவட்டச் செயலருடன் பிரிட்டன் செயலர் சந்திப்பு

கொழும்பு, டிசெ.14

பிரித்தானியத் தூதரகத்தின் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் மனித உரிமைக்கான முதன்மைச் செயலாளர் ஹென்றி டொனாடி கடந்த புதன்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபனை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். கலந்துரையாடலில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் பிரதேச ஆதார மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களின் தேவைப்பாடுகள் குறித்து யாழ்.மாவட்ட பதில் செயலர் சுட்டிக்காட்டினார்.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் தொடர்பாகவும் அதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கினார். அத்துடன் மீள்குடியேற்ற நிலைவரங்கள், அஸ்வெசுமத் திட்டத்தில் பயனாளிகள் தெரிவு முறைமை, வீட்டுத் திட்டங்கள் போன்றவற்றின் விவரங்களை அரசாங்க அதிபரிடம் முதன்மைச் செயலாளர் கேட்டறிந்து கொண்டார். (ச- 27,66,9)



# ஆங்கிலக் கவிதைகள் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்களால் எழுதப்பட்ட 'மலரும் மொட்டுகள்' என்ற ஆங்கில கவிதைகளின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா அதிபர் ச. லலீசன் தலைமையில், கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது

நிகழ்வில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆங்கில பாட விரிவுரையாளரும் கலாசாலையில் இடம்பெற்றுவரும் கல்வி மாணிக் கற்கைநெறி இணைப்பாளருமாகிய மா.பிரபாகரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். நூலின் முதற் பிரதியை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் பெற்றுக்கொண்டார். (ச-25)

பால்நிலை சமத்துவம்

# யாழ்.பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆய்வு மாநாடு!

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவத்துக்கான நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பால்நிலை ஒப்புரவு மற்றும் சமத்துவம் பற்றிய இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு கடந்த புதன்கிழமை, பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது.

'பால்நிலையை முதன்மைப்படுத்துவதற்கான பல்துறைசார்ந்த மற்றும் ஒன்றிணைந்த முன்னோக்குகள்' என்ற தொனிப் பொருளுடன் இடம்பெற்ற இந்த மாநாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராக பங்கேற்றார்.

மாநாட்டுக்கு முன்னதாக, பால்நிலை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கண்காட்சி ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. (ச-125,20)

# தொழில்நுட்பக்கல்லூரிக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ. 14

இலங்கை தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் பாடநெறிகளுக்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி விண்ணப்பதாரிகளில் இருந்து அவர்களது தகைமைகளையும் திறமைகளையும் அடிப்படையாகக் கொண்டு பாடநெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான சகல தகவல்களும் http://www.dtet.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்படிவங்களை [illegible] ஊடாகவும் சமர்ப்பிக்க [illegible] (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுன்னாகத்தில் அமைத்த மின்கம்பங்கள்: ஒருங்கிணைப்புக் குழுவில் வாக்குவாதம்

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள உயரமுத்த மின்கம்பங்கள் தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுக் காரசாரமாக விவாதிக்கப்பட்டுள்ளது.

மின்கம்பங்கள் தொடர்பான பிரச்சினையை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சுன்னாகம் மக்களின் முறையான அனுமதி இல்லாமல் 33 கிலோவாட்ஸ் மின்சாரத்தைக் கடத்த மின்கம்பிகள் அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸாரைக் கடமையில் அமர்த்தி பொதுமக்களின் விருப்பமும் அனுமதியும் இல்லாமல் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என்றார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மின்சார சபை முகாமையாளர், 'எம்மிடம் அனைத்து ஆதாரங்களும் உள்ளன. சட்டரீதியாக பிரச்சினைகளை எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கின்றோம்' என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, 'நகர அபிவிருத்தி சபையின் சட்டங்களின் பிரகாரம் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் சிமெந்து சார்ந்த கட்டுமானங்களை அமைப்பதற்கு அனுமதி பெறப்பட வேண்டும். வீட்டுக்கு அருகால் கம்பிகள் செல்வதற்கு பொதுமக்களின் அனுமதி பெறப்பட வேண்டும். எனினும், அவ்வாறான அனுமதிகள் பெறப்படவில்லை. தன்னிச்சையான நடவடிக்கை இது' என்று சுட்டிக்காட்டினார்.

இதைத் தொடர்ந்து, கருத்துத் தெரிவித்த வலி. வடக்கு பிரதேசசபையின் செயலாளர் எம்மிடம் இந்த விடயம் தொடர்பில் எந்தவிதமான அனுமதியும் பெறப்படவில்லை. பொதுமக்களுக்கு முறையான விழிப்புணர்வை வழங்குமாறு நாம் மின்சார சபைக்கு அறிவுறுத்தி இருந்தோம். எனினும், அவ்வாறு செயற்படவில்லை. பொதுவாகவே இலங்கை மின்சார சபையால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு எம்மிடம் அனுமதி பெறப்படுவதில்லை என்றார்.

இந்த விடயத்தில் தீர்க்கமாக ஆராய்ந்து, சுமூகமாக தீர்வை எட்டுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டது. (ம-125)

## கலைவிழாவும், கௌரவிப்பும்

யாழ்ப்பாணம், டிசெ.14

மல்லாகம் லிற்றில் மாஸ்டெர்ஸ் முன்பள்ளியின் (ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலை) கலைவிழாவும், மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் தலைவர் கி.சதீஸ்குமார் தலைமையில் சுன்னாகம் எம்.எம்.திருமண மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.15 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-45-10)

## சிட்டி விற்பனை

திருக்கார்த்திகை தினத்தை முன்னிட்டு யாழ். குடாநாட்டில் சிட்டி விற்பனை நேற்று வெள்ளிக்கிழமை களைகட்டியது. (ச-45-17)

## ரயில் சேவைகளை உடன் அதிகரிக்குக

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான ரயில் சேவைகளை அதிகரிக்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தேவைகருதி, ரயில் சேவைகளை அதிகரிக்க வேண்டும் என்றும் குறிப்பாக இரவு நேர தபால் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும்இ ரயில் இயந்தியங்கள் பழுதடைந்துள்ளதால் சேவையை அதிகரிக்க முடியாதுள்ளதாக ரயில் சேவை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. கூடிய விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் இதன்போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

## நலன்புரி முகாமிலுள்ள 2 குடும்பத்திற்கு காணி

யாழ்ப்பாணம், டிசெ. 14

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழ்ந்து வரும் இரண்டு குடும்பங்களுக்குக் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்படவுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.


ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 7 லட்சம் ரூபா வீதம், 14 லட்சம் ரூபா காணிக் கொள்வனவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-22-125)

## சர்வதேசப் பத்திரங்களின் மறுசீரமைப்பு வெற்றிகரம்!

இலங்கை தனது சர்வதேச கடன் பத்திரங்களின் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளதாக நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது தொடர்பான உடன்படிக்கைகளை டிசெம்பர் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ம-இ)

# மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 05 . 1943



இறப்பு 07 . 12 . 2024

## திரு. நடராஜா பத்மநாதன்

**(முன்னாள் பிரபல வர்த்தகர் (1965 - 1985) சாவகச்சேரி)**

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி கந்தையா வீதியில் (Nathan Illam) வாழ்ந்தவரும், புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தில் மணமுடித்தவரும், இறுதியில் கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு நடராஜா பத்மநாதன் அவர்கள் கடந்த (07.12.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரி (Toronto) அவர்களின் அன்புக் கணவரும், பத்மலோஜினி, சிவகுமார், மீனலோஜினி, சசிகுமார், சதீஸ்குமார், விஜயகுமார், சுரேஸ்குமார், டினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், கயிலேஸ்வரன், உஷா, பிரதாபன், வதனா, வித்யா, சிவாஜினி, ரஞ்சினி, தீபனா ஆகியோரின் அன்பு மாமனாரும், கனகரெத்தினம், யோகேஸ்வரி, குணரெத்தினம், இரத்தினேஸ்வரி, பரமேஸ்வரி, பரமேஸ்வரன், விமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திர பூபதி, செல்வராஜா, கலாயினி, சாமுவேல், ஆறுமுகராஜா, தேவி, ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிஷானி, நிதன், அபிஷா, அஸ்வினா, அக்ஷன், சுவர்ணகி, நிலானி, நிஷாந், அஸ்வின், அஜன், அபிஷன், அத்விகா, ஆதீஸ், அனிஷா, சாயிரா, அகித், ரபேல், மத்யோ ஆகியோரின் அன்புப் பேரனும், ஜாதித், லியம் ஆகியோரின் அன்புப் பூட்டனும், அஞ்சலன், அஜந்தன், அகல்யன், அயங்கரன், கார்த்திகா, தீபன், சுதர்சன், சுதர்சினி, சுரேந்தி, சுதாகரன், கோபிநாத், ஜெகதாம்பிகை ஆகியோரின் அன்புப் பெரிய தந்தையும், அகிலன், அமுதன், அனித்தா, அச்சுதன், அரவிந்தன், துஷ்யந்தன், துஷ்யந்தி, துசீவன், பிரியா, வித்தியா, மோகனவதனா (வதனா), ஜெகப்பிரதாஸ் (ஜெகன்), கோபிராஜ், பேளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் அஞ்சலிக்காக இன்று (14.12.2024) சனிக்கிழமை 5.00 pm - 9.00 pm நடைபெற்று தகனக்கிரியைகள் நாளை (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை 7.00am - 9.00am Chapel Ridge Funeral Home & Cremation Centre. 8911 Woodbine Ave, Markham, ON L3R 5GJ, Canada என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எமது பரம்பரையை வாழவைத்து தெய்வமாகியவருக்கு எமது கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்.

தகவல்:
மகன் - சசி - வதனா (Swiss)
தங்கை - விமலேஸ்வரி - ராசா (சாவகச்சேரி)
மருமகன் - ஜெகன் - சாளினி (லண்டன்)
மகன் - விஜி (Jaffna)

077 284 9701
076 279 7554

(CS/569(2) J-1

# மயக்க மருந்து கொடுத்து திருடிய இருவர் கைதாகினர்

## வவுனியா பொலிஸார் அதிரடி



வவுனியா, டிசெ. 14

வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளில், மயக்க மருந்து கொடுத்து நகைகள் மற்றும் வாகனங்களைத் திருடிவந்த இருவர் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வாகனங்களைத் திருடிய பின்னர் அவற்றின் வர்ணத்தை மாற்றிவிட்டு, போலியான இலக்கத் தகடு பொருத்தப்பட்டு அந்த வாகனங்களை விற்பனை செய்துவந்தனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், வவுனியா உலுக்குளம் மற்றும் மன்னார், அடம்பன் பகுதிகளில் மயக்க மருந்து கொடுத்து தங்க நகைகளைத் திருடினார்கள் என்றும் அவர்களுக்கு எதிராகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. திருடப்பட்ட நகைகள் விற்கப்பட்ட இடத்திலிருந்து உருக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சத்தியபாலதேவி சிற்றம்பலம்

(யாழ்ப்பாணம், கொட்டடி)



யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், கொட்டடி யாழ்ப்பாணம், கனடா ஸ்காபரோ ஆகிய இடங்களில் வசித்து வந்தவருமான திருமதி. சத்தியபாலதேவி அவர்கள் கடந்த 12.12.2024 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-இராசம்மா தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரவேலு சிற்றம்பலம் (விசக்கடி வைத்தியர் மற்றும் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரன், சிறீமதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசக்தி, சிவகுமார் (கனடா), கதிரவேலு (இலண்டன்), சிவானி (இலண்டன்), சிவநாதன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகிருஷ்ணன், கருணா, தட்சாயினி, சக்திவேல், தயாழினி ஆகியோரின் அன்பு மாமியாரும், தமிழினி, ஜோதினி, கார்த்திகாயினி, சாயீசன், அனுசன் (The Draft Room), அபிநயா, ஜேம்ஸ், அபிராமி, தீபோ, சயந்தன், கரிசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பிரணவன், மகேஸ், கிருத்திகா, யனுஸ், கனிஸ், அலிசா, ஆரியன், அர்ச்சுன், விஷ்ணு ஆகியோரின் ஆசைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 8911 Woodbine Ave Markham Ont L3R 5G1 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள Chapel Ride Funeral Home இல் 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணிமுதல் 10:00 மணி வரையும், மறுநாள் 16.12.2024 திங்கட்கிழமை பகல் 12:30 தொடக்கம் 1:30 வரை பார்வைக்காக வைக்கப்பட்டு அதேநாள் பிற்பகல் 1:30 தொடக்கம் 3:30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று Chapel Ride Funeral Home & Cremation (2 Stalwart Industrial Dr, Gormley, ON L0H 1G0) ல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் :
குடும்பத்தினர்

மலர்வு 14.12.1934 | உதிர்வு 12.12.2024

தொடர்புகளுக்கு:
சிவகுமார் (மகன்) 416-889-3191
கதிரவேலு (மகன்) 44-7960-352784
சிவநாதன் (மகன்) 44-7956-855982
பாலா (மருமகன்) 416-727-6934

(CS/2044) A-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## குணரெட்ணம் ராஜ்குமார் (ரமணன்)

திதி :- சதுர்த்தசி



தோற்றம் 01.09.1981 | மறைவு 06.12.2022



தேய்ந்த நிலவு வளர்வதுபோல்,
அஸ்தமித்த சூரியன் உதிப்பதுபோல்,
மறைந்த நீயும் மலர்வாய் என்ற - எம்
எண்ணங்களுக்கு வயது இரண்டு அண்ணா.!

தாய் தந்தைக்கு தலைமகனாய்,
தங்கைக்கு காவலனாய்,
தம்பிக்கு நல் நண்பனாய்,
தரணியிலே தடம்பதித்த தங்கமகனே.!!

ஊருக்கு உதவுபவனாய்,
உற்றநண்பர்களுக்கு உயிராய்,
உறவுகளின் அரணாய்,
உன்னத மகனானாய்....!!

நிழலாய் தொடர்ந்திடும் - உன்
நினைவுகள் நீளமாகின்றன,
அருகில் நீ இல்லாமல்,
அனாதைகளே நாம் எல்லாம்....!!

நீ இல்லா இவ்வுலகு
நீர் இல்லா பாலைவனம் - அது
கானல்களை காட்டி - நம்
கண்ணீரை கூட்டுகிறது.!!

இல்லாமை இல்லாத
வாழ்வு இல்லை - நீ
இல்லாமையே எம்
வாழ்வின் துயரஎல்லை.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி

45/7 2ம் ஒழுங்கை
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்

தகவல் :
குடும்பத்தினர்

(CS/2035) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## டெங்கு ஒழிப்பு கலந்துரையாடல்

வேலணை, டிசெ. 14

வேலணைப் பிரதேசத்தில் டெங்குநோயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலாளர் க.சிவகரன் தலைமையில் பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், பிரதேசசபை செயலாளர், சுகாதார மருத்துவ அதிகாரி, உதவி சுகாதார மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் கிராம சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

(ச-25, 9)



## பளுதூக்கல் போட்டியில் புசாந்தன் சாதனை

யாழ்ப்பாணம்,டிசெ.14

சர்வதேச ஆசிய பளுதூக்கல் போட்டி உஸ்பெஸிகிஸ்தானில் நடைபெற்றுவரும் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய சாவகச்சேரியைச் சேர்ந்த புசாந்தன் 3 ஆவது இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார் தேசிய ரீதியில் மொத்தமாக 766 கிலோகிராம் எடையைத் தூக்கிச் சாதனை படைத்துள்ளார். தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டிகளில் 3 பதக்கங்களைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ச-33)



## 'கலைமலர் சஞ்சிகை' வெளியீட்டு விழா


யாழ்ப்பாணம், டிசெ.14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 101 ஆவது ஆண்டு சிறப்பிதழான 'கலைமலர் சஞ்சிகை'இன் வெளியீட்டு விழா கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில், கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வஅம்பிகை நந்தகுமரன் சிறப்பு விருந்தினராகவும், தொழிலதிபர் கல்விக் காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், கலாசாலையின் முன்னாள் முதல்வர் வீ.கருணலிங்கம், டாக்டர் க.ஜெயச்சந்திரமூர்த்தி, கலாசாலையின் சிவன் ஆலயப் பிரதமகுரு சிவசிறி பா.செல்வசேனக் குருக்கள் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

மலராசிரியர் விரிவுரையாளர் கு.பாலசண்முகன் நூலின் வெளியீட்டுரையை ஆற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் நூலை வெளியிட்டு வைக்க, ஈ.எஸ்.பி.நாகரத்தினம் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி செல்வஅம்பிகை நந்தகுமரன் மதிப்பீட்டுரையை நிகழ்த்தினார்.

(ச-25, 66)



## சண்டிலிப்பாயில் நிர்வாகசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.14

சண்டிலிப்பாய்ப் பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபையின் நிர்வாக சபைக்கூட்டம் பிரதேச செயலாளரும், பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகாரசபைத் தலைவருமான திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

(ரி-45-66)





மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு பிரிவைச் சேர்ந்த கர்ப்பிணிகளுக்கு அத்தியாவசிய உணவுப் பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. புலம்பெயர் நாட்டில் உள்ள சாவகச்சேரி பொன்னுச்சாமி வீதியைச் சேர்ந்த குடும்பத்தினரால் உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ச-25, 9)



## சீன அரசால் மீன் வலைகள்

மன்னார், டிசெ.14

சீன அரசாங்கத் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்தின் ஊடாக மீனவர்களுக்கு வழங்கப்பட்ட மானிய அடிப்படையிலான வலைத் தொகுதிகள் மன்னாரில் சிலாவத்துறை பிரிவு கொக்குபடையான் மீனவர்களுக்கு மன்னார் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலிஸ்ரனால் முதல் கட்டமாக கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டன. இதன் மூலம் மன்னார் மாவட்டத்தில் 230 மீனவப் படகுகளின் மீனவர்கள் நன்மை அடைவதாக மன்னார் மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-45-60)



அனலைதீவில் உள்ள மூன்று பாடசாலைகளுக்கு புலம்பெயர் நாடுகளில் வதியும் அனலைதீவைச் சேர்ந்த உறவுகளால் தலா 1 இலட்சத்து 35 ரூபா பெறுமதியான அலுமாரிகள் வழங்கப்பட்டன. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மாகாணமட்ட ரீதியில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி பெண்கள் பிரிவு தரம் -4 மாணவர்கள் முதலாம் இடத்தையும் தரம்- 5 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ச-25, 27)









சர்வதேச விஞ்ஞான ஒலிம்பியாட்

## வவுனியா மாணவன் வென்றார் வெண்கலம்

வவுனியா,டிசெ.14

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவன் பா.கசிபன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுள்ளார். இந்தப்போட்டிகடந்தவாரம்ருமேனியாவில் இடம்பெற்றது.

இதில் இலங்கையில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா,கண்டி, களுத்துறை, கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆறு மாணவர்களும் ஐம்பது நாடுகளில் இருந்து சுமார் 310 க்கும் மேற்பட்ட மாணவர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-33-110)



தேசிய மட்ட கராத்தேயில்

## வெண்கலம்வென்ற மாணவி சேர்வியா

மன்னார்,டிசெ.14

கொழும்பு சுகதாச விளையாட்டு அரங்கில் கடந்த 4 ஆம் திகதி நடைபெற்ற தேசிய கராத்தேப் போட்டியில் மன்னார் அடம்பன் மத்திய மகா வித்தியாலய மாணவி மகேந்திரன் சேர்வியா வெண்கலம் வென்று மன்னாருக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவர் ஐ.எஸ்.எஸ்.கே. கழகத்தின் சார்பாக பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-33-60)

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி இரு பிரிவுகளில் சம்பியன்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வடமாகாணக் கல்வித் திணைக்களம் நடத்திய செயற்பட்டு மகிழ்வோம் மாகாணமட்டப் போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி தரம் -3 மூன்றாம் இடத்தையும் தரம் -4, தரம்-5 ஆகிய பிரிவுகள் முதலாம் இடத்தையும் பெற்று சம்பியனை தனதாக்கியுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கில் நடைபெற்றன. (ச-33)

## சாவகச்சேரி இந்து சாதனை

யாழ்ப்பாணம்,டிசெ.14

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் 4 அணிகள் முதலாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளன.தரம்-3 இல் ஆண்கள் அணி மற்றும் பெண்கள் அணி, தரம்-4 இல் ஆண்கள் அணி மற்றும் பெண்கள் அணி என்பன முதலிடத்தையும், தரம்- 5 இல் ஆண்கள் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ச-33-555)




## உலகக்கிண்ண மனக்கணிதப் போட்டி திருநெல்வேலியிலிருந்து இருவர் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.14


உலகக்கிண்ண யுசீமாஸ் மனக்கணிதப் போட்டியில் யாழ்.திருநெல்வேலி யுசீமாஸ் நிலையத்திலிருந்து 2 மாணவர்கள் பங்குகொள்ளவுள்ளனர். உலகக்கிண்ணப் போட்டியில், இலங்கையிலிருந்து 4 மாணவர்கள் பங்குபற்றவுள்ள நிலையில், அவர்களுள் 2 மாணவர்கள் திருநெல்வேலி யுசீமாஸ் நிலையத்தைச் சேர்ந்தவர்களாவர். இந்தியத் தலைநகர் டெல்லியில் நடைபெறவுள்ள இந்த சர்வதேச மனக் கணிதப் போட்டியில் 30 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25, 27,20)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான உளநல மேம்பாடு தொடர்பான பயிற்சிநெறி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. வளவாளராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் உளவள துணையாளர் என்.நவராஜ் கலந்து கொண்டார். (ச-25, 9)





# பால்நிலை வன்முறை தடுப்புமுறை அவசியம்

## யாழ்.மாவட்ட பதில் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம் , டிசெ. 14**

**பால்நிலை அடிப்படையிலான தாக்கம் ஒருவரின் கல்வி, விளையாட்டு, கலாசாரம் போன்ற அனைத்து விடயங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன் முற்தடுப்பு நடவடிக்கைகளை நாம் ஏற்படுத்தவேண்டும் என்று யாழ்.மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.**



பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளைத் தடுத்தல் தொடர்பில் துறைசார் அதிகாரிகள் மற்றும் நிறுவனங்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். பால்நிலை வன்முறையினால் பாதிக்கப்பட்டோருக்கான சேவையையும் மற்றும் முற்தடுப்பு நடவடிக்கைகளை வழங்குவதனை நோக்காகக் கொண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாவட்ட , பிரதேச மட்ட ரீதியாகப் பெண்கள் வன்முறைகள் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெறவேண்டும். வன்முறையைத்தடுக்க பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், அனைத்துப் பிரதேச செயலக துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் இணைந்து ஒருமித்து முயற்சி எடுக்கவேண்டும். இதற்குப் பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பும் அவசியமானது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25, 22,66,9)

# மன்னாரில் வர்த்தகச் சந்தை

மன்னார், டிசெ.14

மன்னார் மாவட்டத்தில் வர்த்தக சந்தையும், கண்காட்சியும் கடந்த புதன் கிழமை காலை 9.30 மணிக்கு மன்னார் நகரப்பிரதேச செயலக முன்றலில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்துவைத்தார். இதில் உள்ளூர் சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டதோடு மலிவு விற்பனையும் இடம் பெற்றது. (ச-33-56)



# கலாசாலையில் பிரிவுபசார நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.14

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில், கலாசாலையில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது முதலாம் வருட ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களின் வாழ்த்துரைகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. (ச-25,66)

# விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், டிசெ.14

யாழ்.நகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. தடுப்பூசிக் கட்டணமாக 100 ரூபா அறவிடப்படும். தங்களது வளர்ப்பு நாய்களை கொண்டு வந்து தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு சுகாதாரப்பிரிவினர் அறிவித்துள்ளனர். எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 - மு.ப.11 மணி வரை முத்தமிழ் வீதி பாலர் பாடசாலையிலும், மு.ப. 11 -பி.ப.1 மணி வரை மீனாட்சி அம்மன் கோவிலடியிலும், பி.ப.2.30- பி.ப. 4 மணி வரை நமச்சிவாயம் பாடசாலை முன்பாகவும் ஊசி ஏற்றப்படும். மறுநாள் வியாழக்கிழமை காலை 9 - மு.ப.11 மணி வரை சுழாவடி வைரவர் கோவிலடியிலும், மு.ப 11 - பி.ப 1 மணி வரை சிறாம்பியடி சனசமூக நிலையத்திலும், பி.ப.2.30 - பி.ப. 4 மணி வரை பலாலி வீதி 2ம் ஒழுங்கையிலும் ஊசி ஏற்றப்படும். 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 - மு.ப.11 மணி வரை யாழ். வீதியிலும், மு.ப.11 - பி.ப 1 மணி வரை பெருமாள் கோவிலடியிலும், பி.ப.2.30 - பி.ப.4 மணி வரை கன்னாதிட்டி காளி கோவிலடியிலும் ஊசி ஏற்றப்படும். 23 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 - மு.ப.11 மணி வரை சிவன் வடக்கு வீதி பாலர் பாடசாலையிலும், மு.ப.11-பி.ப 1 மணி வரை கீரிப்பிள்ளையார் கோவிலடியிலும், பி.ப.2.30 - பி.ப.4 மணி வரை மாவடி வீதியிலும் ஊசி ஏற்றப்படும். மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9 - மு.ப. 11 மணி வரை பிரப்பங்குளம் வீதியிலும், மு.ப.11 - பி.ப 1 மணி வரை பி.ஏ. தம்பி வீதியிலும், பி.ப.2.30 - பி.ப.4 மணி வரை கில்னர் வீதியிலும் ஊசி ஏற்றப்படும். (ச-25)



பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரத்தினை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட சிவில் சமூக அமைப்பு மற்றும் பொஸ்டோ நிறுவனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு, பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக பிரதேச செயலாளர் ஜெயசீலன் கலந்து கொண்டார். (ச-25, 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்



கடந்த 14.11.2024 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத்தவர்

## அமரர் தங்கராஜா சுபாஸ்


அவர்களது துயரச்செய்தி அறிந்த நொடி முதல் இறுதிக் கிரியைகள் வரையிலும் எம்முடன் உடனிருந்து பல்வேறு வகைகளில் உதவிகள் புரிந்தும் நேரடியாகவும், உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் அனுதாபங்களையும், ஆறுதல்களையும் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் வடமாகாண பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(CS/56911) J-1

குடும்பத்தினர்

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
30 . 04 . 1955



மறைவு
26 . 11 . 2023

வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும்,
சிறுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் நீலாத்தை கந்தசாமி (சாரதி)

திதி - சதுர்த்தசி


பொங்கி எழும் கடலாகவும்
வறண்டு போகாத நிலமாகவும் இருந்த எம் பப்பா
இன்று வீழ்ந்து விட்ட மரமாக
இயல்பறுந்து எங்கோ ஓர் தூரத்திற்கு
எம்மைவிட்டு உயிர்மழந்து ஓராண்டு காலமாகிவிட்டது
உறவுகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்து
அன்று சத்தமின்றி அமைதியாய்
சலனமின்றி உதிர்ந்து சென்றுவிட்டீரே
ஆயிரம் உறவுகள் அருகில் இருக்கிறது - ஆனால்
அர்த்தம் புரியாத புதிராகிறது வாழ்க்கை
ஓர் நாள் ஒன்றிணைவோம் ஒரு கூட்டில் - உங்கள்
மடியில் மழலைகளாய் தவழ்வதற்காய்......

(CS/56914) J-1

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
21 . 09 . 1952



இறப்பு
12 . 12 . 2024

## முத்துத்தம்பி யோகரட்ணம் (வவா)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி யோகரட்ணம் (வவா) நேற்றுமுன்தினம் (12.12.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், அன்னலட்சுமி (ஜேர்மனி) குணமணி (மட்டுவில் தெற்கு) ஆகியோரின் அன்புக் கணவரும், பகீரதி (லண்டன்), வாசுகி (நெதர்லாந்து), றஜீவன் (ஜேர்மனி), சதீஸ்குமார் (பிரான்ஸ்), துஷாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவயோகம் மற்றும் யோகராசா, யோகராணி (மட்டுவில் தெற்கு), யோகீஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சுதன் (லண்டன்), பார்த்தீபன் (நெதர்லாந்து), சுனித்தா (ஜேர்மனி), கௌமிகா (பிரான்ஸ்), கௌசிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமியா, றொசானா, டிசான் (லண்டன்), அனுஜன், அனுசா, சுகி (நெதர்லாந்து), றஸ்வன், ஹர்வின் (ஜேர்மனி), அஹானா, அஸ்னா (பிரான்ஸ்), கிலான் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்
077 667 5176

(CR/43880) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 12 . 1936



மறைவு
11 . 12 . 2024

## புஸ்பராணி தியாகராஜா

சங்குவேலி கற்பக்கணையை பிறப்பிடமாகவும் கனடா Montreal ஐ வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பராணி தியாகராஜா கடந்த 11.12.2024 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கோணையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தியாகராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெயசேகரன், ஜெயகுமார் மற்றும் ஜெயேந்திரன், ஜெயேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயந்தி, பவானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், சிலோசனதேவி, ரவீந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கந்தையா, பாலசிங்கம் மற்றும் பவளராணி, சுந்தரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரவீந்த், பிரகாந்த், பிரலஷ்சிகா, பிந்துஜா, ஹரீஸ், ஹரிணி, மதுரா, சுஜீபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மித்திரன், மகிழன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (15.12.2014) ஞாயிற்றுக்கிழமை கனடா நேரத்தின் படி 8.00 - 11.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
இந்திரன் (மகன்) +1514 793 2677
ஈஸ்வரி (மகள்) +143 822 65777

(CR/43880) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
25 . 10 . 1938

விண்ணில்
10 . 12 . 2019



**அமரர் மகேஸ்வரி நடேசபிள்ளை**

(புங்குடுதீவு 3, யாழ் நாவலர் வீதி, வவுனியா பண்டாரிக்குளம்)

திதி– 14.12.2024

ஆண்டுகள் ஐந்து ஆனபோதிலும் ஆறவில்லை எம் துயரம்
நீண்டு நெடுவாழ்வு நாம் வாழ வழி வகுத்த தெய்வமே
மீண்டும் உங்கள் நினைவுகளால் எமதுள்ளங்கள் நிறைகின்றன
நீங்கள் திருநாளில் தங்கள் ஆத்மா சாந்தியடைய ஆராதிக்கின்றோம்.

2C வியாசர் வீதி
பண்டாரிக்குளம் வவுனியா. (CS 2045) V-1 குடும்பத்தினர்

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் திருத்திய தலையங்கம் அறிவித்தல்

1. வே. பஞ்சலிங்கம்
இல. 17, கருவேலடி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

**வழக்காளி**

வழ.இல:நானாவிதம் /439/2023

**எதிராக**

1. கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி
(புதுக்கோயில்)
பரிபாலன சபை, (நீக்கப்பட்டது)
2. நடராசா ஸ்ரீரஞ்சன்
செயலாளர்,
பரிபாலன சபை.
3. இரத்தினசிங்கம் கிரிசாந்தன்
உபதலைவர்,
பாடசாலை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
4. சகாதேவன் மகள் பிரியதர்ஷினி
பொருளாளர்
ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
5. ராசப்பா ராசேஸ்வரி
ஸ்ரேசன் றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
6. இராசரத்தினம் இராஜகோபால்
Press ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
7. கோவிந்தன் செல்வராஜா
குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
8. வி.விஜயசுமன்
குளப்பிட்டி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
09. கைலாசப்பிள்ளை வசீகரன்
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
10. V.ஞானப்பிரகாசம்
ஐயனார் கோயில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
11. பிரதாபன் சூரியபிரகாஷ்
ஐயனார் கோயில் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
12. பிரதாபன் குருபரன்
கொக்குவில் மேற்கு, கொக்குவில்

**எதிராளிகள்**

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கொக்குவில் கிருபாகர சிவசுப்பிமணிய கோவில் பரிபாலன சபையில் அங்கத்தவராக இருப்பவர்கள் எவரும் இவ்வழக்கில் அக்கறை இருப்பின் அவர்கள் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு தை மாதம் 7 ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காலை 9.00 மணிக்கு தோன்றி தமது ஆட்சேபனைகளை தாமாகவோ அல்லது தமது சட்டத்தரணி மூலமோ தெரிவிக்குமாறு இத்தால் கேட்கப்படுகின்றீர்.

**2024 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 11 ஆம் திகதி**

வரைவு
திரு.இ. வசந்தசேனன்
வழக்காளி சட்டத்தரணி (cs- 56904) N-1

பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்
யாழ்ப்பாணம்.

## கணக்காளர் தேவை (Accountant)

மானிப்பாயில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு கணினி முறையில் கணக்குகள் பேணுவதற்கு ஆட்கள் தேவைப்படுகின்றது.
QB தெரிந்தவர் விரும்பத்தக்கது
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்


தொடர்பு: **076 641 3727 / 076 094 6567**

(cs 56906) (N-1)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
11 . 06 . 1968

மறைவு
14 . 11 . 2024



கடந்த 14.11.2024 வியாழக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர் அந்தோனிமுத்து றொபின்சன்**

(ஓய்வுநிலை மதுவரி உத்தியோகத்தர் (சாஜன்ட்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (14.12.2024) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**
**077 435 5556**

பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (CS 56885) N -1

## நான்காம் ஆண்டின் நினைவில்

மண்ணில்
செல்ல மகளாக
03 . 08 . 1977

விண்ணில்
கார்த்திகைச் சுடராக
30 . 11 . 2020



உலகெலாம் ஒளிரும் திருக்கார்த்திகை நாளில் விண்சென்று ஒளிரும்
எம் கார்த்திகைச் சுடர்

**செல்வி தர்ஷினி ஜெயரட்ணம்**

**(Dip - in - English** - பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியை)

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
நல்லக விளக்காம் தர்ஷினி மறைந்து
நான்கது ஆண்டுகள் நகர்ந்தது கரைந்து.

கல்வியில் சிறந்து தன்மாணாக்கர் தமக்கு
நல்லதோர் ஆசானாய் கல்விக்கண் திறந்து
அளப்பரிய அறிவுவிளக்கேற்றியநீ கார்த்திகைநாள்
விளக்கீடு நாணாதே போதியோ பூம்பாவாய்.

லோட்டன் வீதி பருத்தித்துறை.
14.12.2024 (CS/56895) J-1

பிரிவின் துயரினில் கரையும்
**குடும்பத்தினர்**

## வெங்காயம், வாழை அழிவுகளுக்கும் வெள்ளநிவாரணம் வழங்க வேண்டும்

யாழ்.மாவட்ட பதில் செயலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ. 15

சின்ன வெங்காயம் மற்றும் வாழை அழிவுகளுக்கும் வெள்ள நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தி, சின்ன வெங்காயம் மற்றும் வாழைச் செய்கையாளர்களும் இழப்பீடு பெறும் வகையில் ஏற்பாடுகளை மேற்கொள்வதாக யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் இதன் போது தெரிவித்தார். (ம-22-125)

## வட்டுவாகல் பாலத்தில் விரைவில் புனரமைப்பு!

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தை சீரமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்த தாவது:- வட்டுவாகல் பாலம் சுமார் 50 வருடங்களுக்கு மேலாக சீரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுகிறது. சுனாமி இடரின் போதும், இறுதிப் போரின் போதும் பாலம் சேதமடைந்த நிலையில், அது இதுவரை முழுமையாகச் சீரமைப்புச் செய்யப்படவில்லை. விரைவில் எமது அரசாங்கம் அந்தப் பாலத்தைச் சீரமைக்கும் - என்றார். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூச்சல்...

வார்த்தைப் பயன்பாடுகளை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மேற்கொண்டதுடன், அரச அதிகாரிகளின் கல்வித் தகைமை தொடர்பிலும் கேள்வி எழுப்பியிருந்தார். 'பணித்திட்டங்கள்' மற்றும் 'செயற்றிட்டங்கள்' தொடர்பில் கதைக்கவேண்டிய தருணத்தில், அரச அதிகாரிகளின் கல்வித் தரங்கள் தொடர்பில் அவர் கேள்வி எழுப்பியமை முரணானது என்ற போதிலும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும், அநுர அரசாங்கத்தின் மீன்பிடி அமைச்சருமான சந்திரசேகரம் நாடாளுமன்ற உறுப்பினரை கட்டுப்படுத்தாது - அறிவுறுத்தல்களை வழங்காது, 'வாய்மூடி மௌனியாக' வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவரின் தலைமைத்துவமும், அவையை உரிய முறையில் நடத்திச் செல்லமுடியாத தன்மையும் அரச அதிகாரிகளிடையே பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரச நிர்வாகத்திலும், ஆளுமையுள்ளவராகவும் பெயரெடுத்த வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன்கூட 'சபை ஒழுக்கம் கருதி' அந்த நடவடிக்கைகளைக் கண்டிக்காமலும், கண்டிக்கமுடியாமலும் கண்டும் காணாமலும் இருந்தார். யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் பிரதீபனும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தைப் பரந்துபட்ட கருத்துகளையும்பெற்று வழிநடத்திச் செல்ல முடியாதவராக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஒரே நாளில் 10 மில்லியன் செலவழிக்க படையப்பா படம் பார்த்தீர்களா?', 'உங்களின் கல்வியறிவு போதாது', 'திட்டங்களைத் தயாரிக்கும்போது கற்றுத்தருவதென்றால் என்னிடம் வாருங்கள்' என்றவாறான அர்ச்சுனாவின் வார்த்தைப் பயன்பாடுகள், சபையில் இருந்தோரை முகம்சுழிக்கவைத்தன. (அ-ம-26-125)

## ஹரிணி...

ஜாவுக்கும் இடையில் நேற்று மாலை கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பிலும், நட்புறவை மேம்படுத்துவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது என்று பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் நிதியுதவியில் இலங்கையில் தற்போது பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அந்தத் திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு நாளை பயணம் மேற்கொண்டு, இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்டவர்களுடன் உயர்மட்டக் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கைப் பிரதமருக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் நடைபெற்றுள்ள இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் மிக்கதாகப் பார்க்கப்படுகின்றது. (அ-ம-இ)

## மாநகரசபைக்கு...

வித்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்ற நிலையில், அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2020 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டரை வருடங்கள் திட்ட நிறைவுக் காலமாக மதிப்பீடு செய்யப்பட்ட போதிலும் கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் வேலைகள் அமைச்சின் அனுமதியுடன் பிற்போடப்பட்டன.

2 ஆயிரத்து 142 மில்லியன் ரூபா நிதியில் இந்தக் கட்டடத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டது. ஆயிரத்து 992 மில்லியன் ரூபா இதுவரை விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் 82 வீதமான கட்டுமானப் பணிகள் முழுமை பெற்றுள்ளன. கீழ்த்தள வேலைகளும், கூரை வேலைகளும் நிறைவடைந்துள்ள நிலையில், ஜனவரி மாதம்முதல் இந்தக் கட்டடம் மாநகரசபையின் பயன்பாட்டுக்காக ஒப்படைக்கப்படவுள்ளது - என்றார். (அ-ம-125)

## எலிக்காய்ச்சல்...

தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவிவரும் எலிக்காய்ச்சல் நோயால் இதுவரை 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேரும், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 24 பேரும், மருதங்கேணி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேரும் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். (அ-ம125-100-26)

## எலிக்காய்ச்சலை...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஆறு பேருக்குச் சிகிச்சை வழங்கியும் நோயின் தாக்கத்தால் உயிரிழந்துள்ளனர். இவர்களில் ஒருவருக்கு எலிக்காய்ச்சல் எனப் பரிசோதனை முடிவுகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மேலும் ஐந்து பேர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் மூவருக்கு எலிக்காய்ச்சலின் தாக்கமும், ஒருவருக்கு வைரஸ் தொற்றும், மற்றொருவருக்கு இருதயக் கோளாறுடன் வைரஸ் தொற்று இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆய்வுகூடப் பரிசோதனையின் இறுதி முடிவுகள் சில தினங்களில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்கள் அடிப்படை சுகாதார வழிமுறைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். எனினும், பதற்றம் கொள்ளத் தேவையில்லை. இருமலுடன் காய்ச்சல் உள்ளவர்கள் தாமதமின்றி மருத்துவமனையை அணுகிச் சிகிச்சைபெற வேண்டும். உடனடிச் சிகிச்சை பெறும்போது நோயிலிருந்து விரைவாகக் குணமடையலாம் - என்றார். (அ-ம-66)

## கூரைகள்...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்றுச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வீடொன்றைக் கட்டுவதற்காக பயனாளிக்கு ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படுகின்றது. மேலும் சில சந்தர்ப்பங்களில் 0.6 மில்லியன் ரூபா வழங்கப்படுகிறது. முழுமையான நிதி விடுவிக்கப்படாததால் சுமார் ஆயிரம் வீடுகள் கூரைகள் இல்லாத நிலையில் காணப்படுகின்றன. எனவே, வீட்டுத் திட்டங்கள் தொடர்பில் பரிசீலிக்கும்போது முழுமையான நிதி விடுவிப்பு இன்மையால் இவ்வாறு இடைநடுவில் கைவிடப்பட்ட வீடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதையடுத்து எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர், முடிவுறுத்தப் படவேண்டிய வீடுகள் தொடர்பில் அறிக்கை தருமாறு யாழ்ப்பாணம் மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார். (அ-ம-125)

## புலம்பெயர்...

இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு வழங்கிவந்த 116 பாதுகாவலர்கள் ஒரே தடவையில் நீக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்பு மீளாய்வின்றியே இதற்குரிய நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பாதுகாப்புக் குறைப்பின் பின்னணியில் மஹிந்த ராஜபக்சவை கொலை செய்வதற்குரிய சூழ்ச்சித் திட்டம் உள்ளதா? என்ற சந்தேகம் எமக்கு உள்ளது. மஹிந்த ராஜபக்சவுக்குப் பாதுகாப்பு வழங்கிவந்த உணவுப் பரிசோதகர்கள் கூட நீக்கப்பட்டுள்ளனர். உலகில் உணவில் விஷம் கலந்து தலைவர்களை கொலைசெய்த சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இவ்வாறானதொரு பின்னணியில் உணவுப் பரிசோதகர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களை உடன் நீக்கியமைக்குக் காரணம் என்ன? என்று அரசாங்கத்தைக் கேட்கின்றோம்.

கனடாவில் இருந்து செயற்படும் புலம்பெயர் தமிழர்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் இந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகின்றது. வடக்கு, கிழக்கில் முகாம்கள் அகற்றப்படுகின்றன. மஹிந்தவின் பாதுகாப்பு நீக்கப்படுகின்றது. இது புலம்பெயர் தமிழர்களின் தேவைக்காக நடக்கின்றது. மஹிந்த ராஜபக்சவை கொல்வதற்குரிய களம் அமைத்துக் கொடுக்கப்படுகின்றதா? மஹிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பு அவசியம். எனவே, பாதுகாப்பை குறைக்கும் திட்டத்தை இந்த அரசாங்கம் மீளப்பெற வேண்டும்'- என்றார். (அ-ம-44)

## தவறு...

துக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இதன்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஏழு தசாப்தங்களுக்கும் அதிகமாக இந்த நாட்டு மக்கள் பல்வேறு அரசாங்கங்களைத் தெரிவு செய்தனர். பல அரசாங்கங்களை கவிழ்த்துள்ளனர். ஆனால், வரலாற்றில் முதல்முறையாக தேசிய மக்கள் சக்திக்கு ஆணை வழங்கியுள்ளனர். அதன் அர்த்தத்தை நான் ஆழமாகப் புரிந்து வைத்துள்ளேன். எனவே, மக்களின் சிந்தனைகள் தோற்றுப்போக அனுமதிக்கமாட்டேன்.

நாட்டுக்குள் தவறு செய்கின்ற எவரையும், எந்தக் காரணத்துக்காகவும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் தயாரில்லை. ஏழு தசாப்தங்களாக ஏமாற்றங்களுக்கு உள்ளான மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாக்கவும், இந்த நாட்டை மிகச்சிறந்த நாடாக மாற்றுவதற்கும் நான் நிபந்தனையின்றி என்னை அர்ப்பணிப்பேன் - என்றார். (அ-ம-இ)

## இராணுவப்...

தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரம் தெரிவித்தார். தற்போது படையினரிடம் உள்ள காணிகள் 2025ஆம் ஆண்டுமுதல் படிப்படியாக விடுவிக்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக இவ்வருடம் ஆயிரத்து 303.42 மில்லியன் ரூபா நிதி செலவழிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-ம-125-26)

## சபாநாயகர்...

இது தொடர்பில் அவர் நாடாளுமன்றத்துக்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

கடந்த சில நாள்களாக என்னுடைய கல்வி அடைவு சம்பந்தமாக வாத விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. நான் எந்த இடத்திலும் பொய்யான தகவல்களை வழங்கவில்லை. ஆனால் அந்தக் கல்வித் தகைமையை உறுதி செய்யக்கூடிய ஆவணங்கள் என்னிடம் இல்லை. அதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்தே பெறவேண்டியுள்ளது. எனவே அது உடனடியாகச் செய்வது கடினமான விடயம்.

எனக்கு பேராசிரியர் பட்டம் தந்த ஜப்பான் வசேதா பல்கலைக் கழகத்தோடு இணைந்த ஆவணங்களை என்னால் முன்வைக்க முடியும். அதனை நான் விரைவில் முன்வைப்பேன். ஆனால் தற்போது எழுந்துள்ள நிலைமையை கருத்திற்கொண்டு எங்கள் மீது நம்பிக்கை வைத்த மக்கள் நிர்க்கதிக்கு உள்ளாகாமல் இருக்க நான் ஏற்றுள்ள சபாநாயகர் பதவியில் இருந்து விலகுகின்றேன் - என்றுள்ளது. (அ-ம-44)

**(தொடர்புடைய செய்தி பக்கம்: 02)**

## வேலையற்ற...

நேற்றுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பட்டப் படிப்பை நிறைவுசெய்து ஐந்து ஆண்டுகள் ஆகின்ற போதிலும் இதுவரை எமக்கு அரச வேலைகள் வழங்கப்படவில்லை. எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமாவது எமக்கான நியமனங்களை வழங்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு I.O.C. பெற்றோல் நிலையத்திலிருந்து 200 மீற்றர் தூரத்தில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் கொடுக்கப்படும்.

தொடர்புக்கு:- 077 224 7902

(CR/43878) J-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற பிரபல உற்பத்தி கம்பனிக்கு
- காசாளர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (வாகன சாரதிப் பத்திரம் வைத்துள்ளவர்கள் விரும்பத்தக்கது)

நேர்முக தேர்வு (15.12.2024) காலை 10.00 மணிக்கு இராசவீதி, நீர்வேலி மேற்கு, நீர்வேலியில் அமைந்த அலுவலகத்தில் நடைபெறும்.

தொடர்பு:- 077 262 7581

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 12 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
- தண்ணீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ஒரு பரப்பின் விலை 8 லட்சம்

பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00

தொடர்புகளுக்கு:
076 069 1105, 077 288 0152

## விற்பனைக்கு/வாடகைக்கு தேவை

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளைப் பகுதியில் Appartments, வீடுகள் விற்க இருப்போர் மற்றும் வாடகைக்கு கொடுக்க இருப்போர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
076 311 9485, 076 050 3863

## சாரதி தேவை

சாவகச்சேரிப்பகுதியில் இயங்கும் கட்டட நிறுவனத்திற்கு கடமையாற்ற பார ஊர்தி அனுமதிப்பத்திரமுள்ள சாரதி தேவை.
சாவகச்சேரியை அண்மித்தவர்களும், பொருட்கள் ஏற்றி, இறக்கக்கூடியவர்களும் விரும்பத்தக்கது.

077 958 7176

(CS/2024 A) J-1

## குருதிக் கொடை

கோண்டாவில் துர்க்கா விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்படும் குருதிக் கொடை முகாம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(ம-66)

## காணி தேவை

யாழ் மாவட்டத்தில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட, கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 10 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை.
காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- குரு- 077 468 3354


(CS/56919) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 24 லட்சம் ரூபா

தொடர்புகளுக்கு:
076 298 1105, 076 017 1105

## 9ஆம் ஆண்டு நினைவும் 5ஆம் ஆண்டு நினைவும்



மலர்வு 14 . 06 . 1939 — உதிர்வு 25 . 11 . 2015



மலர்வு 16 . 06 . 1947 — உதிர்வு 05 . 04 . 2019

**முத்துத்தம்பி மகாதேவன்** **மகாதேவன் நாகேஸ்வரி**

எங்கள் அன்புத் தாயே! ஆண்டு ஐந்து மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் அம்மா, நிழல் தந்து எமை வளர்த்து
நிலைத்து மண்ணில் வாழ வைத்து உறுதியுடன் எமைக் காத்த
எங்கள் அன்புத் தெய்வங்களே!
உங்களது பிரிவினால் துடிதுடிக்கின்றோம்.

உறவென்ன உற்றாரென்ன ஏன் ஊராரும் வியக்கும்
எங்கள் குடும்பச் சொத்துக்களே!
என்னவென்று சொல்வது உங்களின் சேவையை
ஏங்கித் தவிக்கின்றோம். எங்கள் மாணிக்கங்களே!
மண்ணிலே மீண்டும் வந்து பிறவீர்களோ!
மறுபடியும் எம்மோடு கலந்து வாழ்வீர்களோ!

ஐயா, அம்மா என்று அழைத்த எங்கள் தெய்வங்களே!
ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் வார்த்தை சொல்லும்
ஓயாமல் உழைத்திட்ட எங்கள் உத்தமர்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

196, காரைநகர் வீதி,
வில்லூ ன்டி பிள்ளையார் கோவிலடி
யாழ்ப்பாணம்.

நினைவுகளுடன்
உங்களது பாசமிகு மகன்

(CS/56918) J-1

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

**இன்று 13.12.2024 முதல் 31.12.2024 வரை**

**இந்தியன் செலக்ஷனின்**



SPECIAL OFFER

நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிக் கொண்டாட்டம்

1500/- ➤ 1000/-
3000/- ➤ 2000/-
3500/- ➤ 2500/-
4000/- ➤ 2800/-
6000/- ➤ 4000/-

சாறி Offer விசேட விலைக்கழிவு

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத் தெரிவுகள் இம்முறையும்

MEGA SALE

நத்தார், புதுவருடத்தை
இந்தியன் செலக்ஷனுடன் கொண்டாடுங்கள்

காலம் : 13.12.2024 முதல் 31.12.2024 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்.

(CR/43881) J-1

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- ▲ 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ▲ 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- ▲ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- ▲ அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

**ஒரு பரப்பின் விலை**

- ▲ நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ கடற்கரையை (Beach) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- ▲ 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே
- ▲ தரகர் தேவையில்லை
- ▲ பார்வையிடும் நேரம்: -

காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: ஜெயம்
077 814 7389
077 986 5457

(cs.11944) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.